மா.ப
பட்டுக்கோட்டை

/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

RPAP
RT 119068890N
18/2/20 15.13

மே.எ.எண்.16491/கே2/2017-1 நாள்.11.02.2020

அரசாணை (2டி) எண்.07, வணிகவரி மற்றும் பதிவு (எம்2)த்துறை, நாள்.29.01.2020 சார்பு செய்யப்படுகிறது.

திரு.மு.வீராச்சாமி, இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் S.S.L.C. மதிப்பெண் சான்று அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப பட்டுக்கோட்டை மாவட்டபதிவாளர் கோரப்படுகிறார்.

ஒம்./-11.02.2020
பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

/ஆணையின்படி/

14/2/2020
மாவட்ட பதிவாளர்

14/02

பெறுநர்:
திரு.மு.வீராச்சாமி, இளநிலை உதவியாளர்.
(பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் மூலம்)

நகல்:
1.மாவட்ட பதிவாளர், பட்டுக்கோட்டை.
(S.S.L.C. அசல் மதிப்பெண் சான்று-
பதிவு எண்.2654461/மார்ச் 2014).
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

**<u>சுருக்கம்</u>**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.மு.வீராச்சாமி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமித்தது தமிழ்நாடு அரசு பணியாளர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் 2016–ன் பிரிவு 20(6) (b) மற்றும் பிரிவு 28(2)–க்கு விலக்கு அளித்து – பணி வரன்முறை – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை</u>**

**அரசாணை (2டி) எண்.07** | **நாள் 29.01.2020**
**விகாரி, தை–15,**
**திருவள்ளுவர் ஆண்டு–2051.**

**படிக்கப்பட்டவை**

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.54619/கே2/2016–5, நாள் 08.12.2017.
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.16491/கே2/2017, நாள் 05.04.2019 மற்றும் 28.11.2019.

******

**<u>ஆணை:-</u>**

பதிவுத்துறையில், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 05.01.2015 அன்று காலமான திரு.க.முருகேசன் என்பவரின் மனைவி திருமதி.மு.ராஜகுமாரி தமது மகன் திரு.மு.வீராச்சாமி என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 11.05.2016–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி அன்னாரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.மு.வீராச்சாமி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாக படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.மு.வீராச்சாமி 13.12.2017–ஆம் நாள் முற்பகலில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.மு.வீராச்சாமி, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறைத் தலைவரின் செயற்குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டதில், பதிவுத்துறையில், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த போது 05.01.2015–ல் பணியிடை காலமான அரசு ஊழியர் திரு.க.முருகேசன் என்பவரின் மனைவி திருமதி.மு.ராஜகுமாரி என்பவர் அவரது மகன் திரு.மு.வீராச்சாமி என்பவருக்கு கருணை

அடிப்படையில் பணி நியமனம் வேண்டி 11.05.2016 அன்று அளித்த விண்ணப்பம் அரசுப் பணியாளர் காலமாகி 3 ஆண்டுகளுக்குள் அளிக்கப்பட்டிருந்தாலும், அப்போது தனியருக்கு 18 வயது நிறைவடையவில்லை. எனினும் பணிநியமன நாள் 13.12.2017 அன்று தனியருக்கு 18 வயது பூர்த்தி அடைந்துள்ளது. இருப்பினும், மேற்கண்ட பணிநியமனம், அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10.12.2014—ன் பத்தி 5(i)—க்கு மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016—ன் பிரிவு 20(6)(b)—க்கு முரணானது. எனவே மேற்கூறிய அரசாணை மற்றும் சட்டப் பிரிவு 20(6)(b)-க்கு விலக்கு அளிக்கும் நிலை எழுகிறது. மேலும் தனியரின் பணியினை 13.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செய்யும் பட்சத்தில் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 28(2)—ஐயும் தளர்வு செய்யும் நிலை எழுகிறது.

3. இந்நிலையில், திரு.மு.வீராச்சாமி பதிவுத்துறைத் தலைவரால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில் பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ஏற்கனவே பணிநியமனம் செய்யப்பட்டுள்ள நிலையிலும், தனியருக்கு பணிநியமன நாள் அன்று 18 வயது நிறைவடைந்துள்ள நிலையிலும் அவரது பணியை பணப்பலன்களுடன் பணிநியமன நாள் 13.12.2017 முற்பகலில் இருந்து வரன்முறை செய்ய ஏதுவாக தனியர்பொருட்டு அரசு கடிதம் (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10.12.2014 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016—இன் பிரிவு 120(6)(b) மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து, திரு.மு.வீராச்சாமி என்பவருக்கு தேவையான உடல் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 58—ன்படி தமிழ் நாட்டு ஆளுநர் அவர்களால் அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

4. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.8875/ட்டி1/2019—1, நாள் 27.05.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34221/ஜி2/2019—1, நாள் 09.11.2019—ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை—28.
✓திரு.மு.வீராச்சாமி, இளநிலை உதவியாளர்,
பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

<u>நகல்:</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(ட்டி1)த்துறை, சென்னை—9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

21.1.2020

பிரிவு அலுவலர்.